# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 3/2022** **Date:23.03.2026.**

**(DW1)-** ஆண்டனிஜோஸ்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. திங்கள் நகர் எல்கைக்கு உட்பட்ட சர்வே எண் 169/12,169/13 ஆகிய சொத்துக்கள் ஆதியில் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் சுவாமிகண்ணுக்கு உரிமைப்பட்டது. மேற்படி சுவாமிகண்ணு தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இறந்து விட்டார். அவர் உயிருடன் இருந்த காலகட்டத்தில் சர்வே எண் 169/13 ல் 30 செண்ட் நிலத்தை தனது மகள் வசந்தகுமாரிக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேலும் 169/12 ல் உள்ள சொத்தும் 169/13 மீதமுள்ள சொத்துக்களையும் அவரது மகன்களுக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2. அதன் பின்பு அவரது மகன்கள் 2001 ஆம் வருடம் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை படி சர்வே எண் 169/13 யை A முதல் F என்று 6 கண்டங்களாக பிரித்துகொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகபிரிவினை படி பாதை அமைக்கப்பட்டு அது 169/13 F என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாகபிரிவினையில் சர்வே எண் 169/12 ல் இரண்டு பாகங்களாக சர்வே எண் 169/12A மற்றும் 169/12B என்று உட்பிரிவு செய்யப்பட்டு அதில் 169/12 பி பாதைக்கு என்று ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல, 169/12 உட்பிரிவு செய்யப்படவில்லை. மேற்படி விபரம் மேற்படி பாகபிரிவினையில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் துலங்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி சர்வே எண் 169/13 F மற்றும் 169/12B ஆகிய சொத்துக்கள் பாதைக்கு என்று ஒதுக்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 169/13 A மற்றும் 169/13 பி ஆகிய சொத்துக்களை வாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, 169/13 பி மற்றும் 169/13 சி சொத்துக்களை தான் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சொத்துக்களுக்கு 169/13F பாதையை பயன்படுத்தி கொள்ளலாம் என்று உரிமை வழங்கியுள்ளார்கள் என்றால் 169/13 பி வரை அவர்களுக்கு வழிபாதை உள்ளது. ராமதாஸ் மற்றும் சிவானந்ததாஸ் மற்றும் வசந்தகுமாரி ஆகியோர் சொத்துகளை நான் வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி சிவானந்ததாஸ்க்கு சர்வே எண் 169/12 ஏ ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சர்வே எண் 169/12 முழுமையும் அவர் பெயரில் இருந்தது அதை நான் கிரயம்

பெற்றுள்ளேன். மேற்படி சிவானந்ததாஸ்க்கு பாகபிரிவினைபடி மேற்படி சர்வே எண்ணில் 16 செண்ட் சொத்துக்களை மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் அது 169/12 ஏ வாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி பாகபிரிவினை சிவானந்ததாஸ்க்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மேற்கு பக்க எல்கையாக பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனக்கு முழு சொத்தையும் எழுதிகொடுத்துவிட்டார்.

5. எனது ஆவணத்தில் கிழக்கு பக்க எல்கையாக வழக்கு பட்டிகை பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்படி நபர்களிடம் இருந்து 2021 வருடம் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி சிவானந்ததாஸ் தனக்கு பாகபிரிவினை படி 16.5 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றும் கைவசம் அனுபவப்படி 18.5 செண்ட் உள்ளது என்றும் குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் சரிதான். அவர் கூடுதலாக எழுதிக்கொடுத்த இரண்டு செண்ட் சொத்து பாதை என்றால் சரியல்ல, அது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும்.

6. மேற்படி விபரம் எனக்கு தெரிந்திருந்தும் மேற்படி பாதை அபகரிக்கவேண்டி நான் ஆவணத்தை எழுதினேன் என்றாலும் மேற்படி ஆவணத்தை பதிவு செய்ய வேண்டி தாசில்தாரிடம் போலியாக சான்று பெற்று பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல, மேற்படி சான்று சிவானந்ததாஸால் அவரது மற்ற சகோதரர்கள் மேற்படி சொத்தில் உரிமை இல்லை என்று கையொப்பம் செய்து பெறப்பட்டது. மேற்படி சான்று மனு செய்த மறுநாளே எந்த விசாரணையும் செய்யப்படாமல் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சிவானந்ததாஸ் 18.5 செண்ட் நிலத்தை கைவசம் வைத்து அனுபவித்து வந்தார் என்று எதன் அடிப்படையில் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவர் மேற்படி சொத்திற்கு வேலி அமைத்து அனுபவம் செய்து வந்தார்.

7. மேற்படி வேலி மற்றும் எல்கை சுவர் வழக்கு தாக்கல் செய்தபின்பு நான் கட்டியது என்றால் சரியல்ல, வேலி ஏற்கனவே இருந்தது அதை தொட்டு நான் எல்கை சுவர் 2022 வருடம் ஜனவரி மாததில் கட்டிவிட்டேன். நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் NH என்று குறிப்பிட்ட கேட் நான் பூட்டி கைவசத்தில் வைத்துள்ளேன் என்றால் ஏற்கனவே சிவானந்ததாஸ்சின் கைவசத்தில் இருந்ததை நான் பெற்று தொடர்ந்து அனுபவம் செய்தேன். மேற்படி விபரத்தை நான் பிராதில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். மேற்படி பாகபிரிவினை படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் GH என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிதான் மேற்படி 16 செண்ட் சொத்தின் எல்கை என்றால் சரியல்ல.

8. மேற்படி புள்ளிதான் 16 செண்ட் சொத்தின் எல்கை என்றாலும் நான் தற்போது பாதையும் சேர்த்து NF என்ற புள்ளிகளை அபகரித்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எவ்வளவு அடி உயரத்தில் எல்கை சுவர் அமைத்துள்ளேன் என்றால் 4 அடி உயரத்தில்

அமைத்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் NF என்று குறிப்பிடப்பட்டுள்ள சுவரை தான் வாதி அப்பிறப்படுத்த வேண்டி பாரிகரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான், அது என்னுடைய சொத்தாகும். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள NH பகுதியில் உள்ள கேட்டையும் அகற்றவேண்டி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான்.

9. எனது முதல் விசாரணையில் தாவா பாதை வாதிக்கு தேவையில்லை என்ற காரணத்தினால் அடைத்துவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சிவானந்ததாஸ மற்றும் ராமதாஸ் ஆகியோர் சேர்ந்து மேற்படி சொத்தை வெளிப்படையாக பாதை என்று அறிவித்துவிட்டனர் என்றாலும் அதை உரிமைமாற்றம் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல, அவர்கள் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்துவிட்டார்கள். எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் மேற்படி பாதை 3 நபர்களுக்கும் உரிமைப்பட்ட பாதை என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சிவானந்ததாஸ்க்கு உரிமைப்பட்ட சொத்தாக குறிப்பிட்டு எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

10. தாவா பாதை 336 லிங்ஸ் என்று எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் கேட் அமைக்கப்பட்டுள்ள சர்வே எண் 169/12 முன்புவரை அவர்களுக்கு மேற்படி அளவு கொண்ட பாதை உள்ளது. மேற்படி பாதையின் தொட்டு உள்ள சொத்துக்களின் ஆவணங்களில் பாதை குறிப்பிடபடவில்லை என்று எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சர்வே எண் 169/13 பி வரை பாதை உள்ளது என்பது எனது கட்சியாகும். பிரதான சாலையில் இருந்து சர்வே எண் 169/13 சொத்து தொடங்கும் இடத்தில் நான் கேட் அமைத்திருந்தேன் என்றாலும் அதை நீதிமன்றஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, இது வரை எந்த கேட்டும் அமைக்கவில்லை.

11. சர்வே எண் 169/12 க்கு வடக்கு பக்கம் சர்வே எண் 169/11 சொத்து உள்ளது என்றால் அது என்னுடைய சொத்தாகும். அதை எப்போது கிரயம் பெற்றேன் என்றால் 2021 ஆம் வருடம் சுபாஷ் ஆண்டனி என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றேன். மேற்படி சொத்திற்கு பாதை உள்ளதா என்றால் சர்வே எண் 168/1B ல் இருந்து பாதை வருகிறது. மேற்படி சொத்திற்கும் நான் 169/12 ல் உள்ள பாதையை தான் இனைத்துவைத்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி 169/12 என்னுடைய சொத்தாகும் எனவே நான் அதை பாதையாக பயன்படுத்தி வருகிறேன். சர்வே எண் 169/12 முழுமையும் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சர்வே எண் 169/12 ஏ -வில் மட்டுமே எனக்கு உரிமையுள்ளது என்றாலும் 169/12 பி உரிமையில்லை என்றால் சரியல்ல.

12. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போல் வாதி தாவா சொத்தில் புலங்கு உரிமை கோர வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. நீதிமன்றஆணையரின் வரைபடமும் வா.சா.ஆ.3

பாகப்பிரிவினையில் இனைக்கப்பட்டுள்ள வரைபடமும் எந்த வேறு பாடும் இல்லாமல் ஒன்று போல் உள்ளது என்றால் சரியல்ல. வாதி தாவா பாதையை பயன்படுத்த கூடாது என்பதற்காகவும் வேற்று பாதையை பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அவ்வாறு பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல, அவர்கள் பாதை பயன்படுத்துவதை நான் தடை செய்யவில்லை. நான் எல்கை சுவர் கட்ட தொடங்கியதும் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, சுவர் கட்டியப்பின்பு பொய் சங்கதிகளை கூறி புகார் அளித்தனர்.

13. மேற்படி புகாரின் அடிப்படையில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அது வேறு புகாருக்காக கொடுக்கப்பட்டு அதுவும் முடிக்கப்பட்டுவிட்டது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கபடவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**